**PRESS NOTE**

# FORMERLY JUNIOR ENGINEER, CHENNAI, WAS CONVICTED FOR 5 YEARS OF RIGOROUS IMPRISONMENT FOR RECEIVING RS.10,000/- AS BRIBE.

- - - - - -

A case in V&AC HQrs. Crime No.10/2008/AC/HQ u/s.7 of Prevention of Corruption Act 1988 was registered based on the complaint of Thiru.S.Murugan, residing at No.9, Thiruvalluvar street, Dhandeeswaram extension, Velachery, Chennai against Tr.S.Venkatesan, formerly Junior Engineer Grade-I, TNEB, Velachery, Chennai.

Tr.Murugan was constructing house at No.20, 4th Avenue, 1st Cross Street, Dhandeeshwaram, Velachery, Chennai-42 and applied for getting two electricity service connections to a newly constructed building. While he was approaching Tr.S.Venkatesan, Junior Engineer Grade-I, TNEB, Velachery East, at his office at about 11.30 am on 7-11-2008 and at that time Tr.S.Venkatesan initially demanded Rs.10,000/- as illegal gratification other than legal remuneration for him for giving two EB service connections. When Tr.S.Murugan pleaded his inability, the accused reduced it into Rs.5,000/- with a direction to pay Rs.2000/- as advance payment.

On 08-11-2008 at about 12.00 noon at the office of the accused at Velachery, the accused Tr.S.Venkatesan further reiterated his earlier demand of Rs.2000/- and accepted. The accused was arrested and sent to judicial custody.

After the investigation, the charge sheet in CC.30/2011 was filed before the Hon'ble Special Court for the cases under P.C. Act, Chennai and 12 Prosecution Witnesses were examined and 24 Exhibits and 4 Material Objects were marked on the side of prosecution.

Today (21.03.2025), the Hon'ble Special Judge for the Court for the Cases under P.C. Act, Chennai pronounced the judgment that the accused Tr.S.Venkatesan, formerly Junior Engineer Grade-I, TNEB, Velachery East, Chennai-42, now Assistant Engineer found guilty and ordered to undergo 4 Years RI and fine of Rs.50,000/- under Section 7 of Prevention of Corruption Act, 1988 in default 3 months Simple Imprisonment and 5 Years RI and fine of Rs.50,000/- under Section 13 (2) r/w.13 (1) (d) of Prevention of Corruption Act, 1988 in default 6 months Simple Imprisonment and also ordered to run the sentence concurrently. Total fine amount of Rs.1,00,000/- was paid by the accused and he was sent to Central Prison, Puzhal.

<u>பத்திரிகை செய்தி</u>

## <u>புதிய மின் இணைப்பு கொடுக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய இளநிலை பொறியாளருக்கு 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை</u>

- - - - - -

திரு.S.முருகன், எண்.9, திருவள்ளுவர் தெரு, தண்டீஸ்வரம் விரிவு, வேளச்சேரி, சென்னை என்பவர் தான் எண்.20, 4வது நிழற்சாலை, முதல் குறுக்குத் தெரு, தண்டீஸ்வரம் விரிவு, சென்னை-42 என்ற இடத்தில் வீடு கட்டிக் கொண்டிருப்பதாகவும், அதற்கு 2 புதிய சர்வீஸ் மின் இணைப்புகளை பெற 07.11.2008 அன்று 11.30 மணிக்கு திரு.S.வெங்கடேசன், இளநிலை பொறியாளர் நிலை-1, தமிழ்நாடு மின்சார வாரியம், வேளச்சேரி கிழக்கு, சென்னை அவர்களை அவருடைய அலுவலகத்தில் பார்த்த போது, திரு.வெங்கடேசன் தன்னிடம் ரூ.10,000/- கையூட்டு கேட்டதாகவும், அதற்கு தன்னால் இயலாது என்ற போது, திரு.வெங்கடேசன் அத்தொகையை ரூ.5,000/-மாக குறைத்துக் கொண்டு, அதில் ரூ.2,000/-ஐ முன்பணமாக கேட்டார் என அளித்த புகாரின் அடிப்படையில், 07.11.2008 அன்று ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை குற்ற எண்.10/2008/AC/HQ பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம், 1988-ன் கீழ் வழக்கு பதியப்பட்டது.

08.11.2008 அன்று பகல் 12.00 மணிக்கு எதிரியின் அலுவலகத்தில் திரு.முருகன் சென்று பார்த்த போது, எதிரி திரு.வெங்கடேசன் மறுபடியும் தான் கேட்ட தொகை ரூ.2,000/- கேட்டு பெற்றுக் கொண்டார். எதிரி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார்.

புலன்விசாரணைக்குப் பின், மாண்புமிகு சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சென்னையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, CC எண்.30/2011-ல் 12 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், 24 அரசு தரப்பு ஆவணங்கள் மற்றும் 4 வழக்கு பொருட்கள் குறியீடு செய்யப்பட்டன.

இன்று (21.03.2025) மாண்புமிகு சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சென்னை அவர்கள் எதிரி திரு. S.வெங்கடேசன், இளநிலை பொறியாளர் நிலை-1, தமிழ்நாடு மின்சார வாரியம், வேளச்சேரி கிழக்கு, சென்னை தற்பொழுது உதவி பொறியாளரை குற்றவாளியாக கருதி, ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 7-ன்கீழ் 4 வருட கடுங்காவல் தண்டனையும் ரூ.50,000/- அபராதமும் தவறினால் 3 மாத சிறைத் தண்டனையும், ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 13 (2) r/w.13 (1) (d)-ன்கீழ் 5 வருட கடுங்காவல் தண்டனையும் ரூ.50,000/- அபராதமும் தவறினால் 6 மாத சிறைத் தண்டனையும் வழங்கி தண்டனை வழங்கினார். குற்றவாளி மொத்த அபராதத் தொகை ரூ.1,00,000/-ஐயும் செலுத்தினார். பிறகு எதிரி புழல் மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டார்.